**தலைப்பு 1 – அதிமேதகு சனாதிபதி அலுவலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

சனாதிபதி அலுவலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் சனாதிபதி அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 22 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 திசெம்பர் 08 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது.இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சனாதிபதி அலுவலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அலுவலகத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அலுவலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் அலுவலகத்தின் மொழி கொள்கை அமுல்படுத்துவதற்கும் அபிவிருத்தி உதவிகளுக்குமான மூலதன செலவின விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 5,015,000 மொத்த தேறிய நிதி ஏற்பாடும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கொவிட் 19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக திட்டமிடப்பட்ட பிராகரம் பணிகளை அமுல்படுத்த முடியாதிருந்தமையினால் அரச மொழி கொள்கை அமுல்படுத்தும் செலவின விடயத்திலும் செயலாற்றல் படையணி அலுவலகம் பிரதமர் அலுவலத்தில் ஸ்தாபிக்கப்பட்டமையினாலும் மூலதன உபகரணங்களின் தேவை அந்த அலுவலகத்தின் மூலம் பூர்த்தி செய்தமை மற்றும் 2019.12.04 ஆம் திகதிய 07/2019 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் செலவினங்கள் வரையறுக்கப்பட்டமையின் காரணமாக அபிவிருத்தி உதவிகளுக்கான செலவின விடயத்தின் மொத்த தேறிய நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 50 இல் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி அளவில் 1402 செலவின விடயத்தின் கீழ் தொலைபேசி கட்டணமாக ரூபா 2,004,534 தொகை செலுத்த வேண்டியிருந்த போதும் அது நிதிக் கூற்றுக்களின் அட்டவணை இலக்கம் (iii) இல் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டிற்குரிய NEW CIGAS இணைய தளத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன், உரிய பெறுமதி 2019 ஆம் ஆண்டின் நேற NEW CIGAS இணைய தளத்தில் செலுத்த வேண்டிய பட்டியல்களின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்த மையினால் அப்பெறுமதி 2020 ஆம் ஆண்டின் போது உரிய இணைய தளத்தின் செலுத்தும் பெறுமதியாக அகற்றப்பட்டிருந்த போதும் அது இணைய தளத்தில் சரியாக நாளது வரையாக்கப்படாமையின் அடிப்படையில் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்களில் மீளாய்வாண்டிற் குரிய பொறுப்புக்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>நிதிப் பிரமாணம் 454(1) | i. 635 திறைசேரி விடயங்களின் பொருள் பதிவேட்டுப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | பொருட்கள்/ உபகரணங்கள் உரிய பிரிவுகளின் பொருட் பதிவேட்டுகளில் உள்ளடக்குமாறு மேலதிக செலயாளர் (உள்ளக நிர்வாகம் மற்றும் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செயற்பாடுகள்) இனால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |
| ii. | பிரத்தியேக பாதுகாப்பு உத்தியோகத்தர் அலுவலகம் (PSO) மற்றும் வலாக உத்தியோகத்தர் அலுவலத்திற்கான பொருட் பதிவேட்டு உத்தியோகத்தர் 2021.01.01 ஆம் திகதியில் உள்ளவாரு வருடாந்த பொருள் மெய்மெய்யாய்வு சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | பிரத்தியேக பாதுகாப்பு உத்தியோகத்தர் அலுவலகத்தில் (PSO) காணப்படுகின்ற பொருட் பதிவேட்டு பொருட்கள் அந்த பிரிவின் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தற்போது மேலதிக செயலாளர் (உள்ளக நிர்வாகம் மற்றும் செயலாளரினால் ஆலோசனை வழங்கப்பட்டிருந்த துடன், அதன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டிற்குரிய பொருட் மெய்மெய்யாய்வின் போது பிரத்தியேக பாதுகாப்பு உத்தியோகத்தர் அலுவலகத்தின் மெய்மெய்யாய்வு நடவடிக்கைகளை சரியான பிரகாரம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். சுற்றாடல் உத்தியோகத்தர் அலுவலகத்தின் பொருட் பதிவேட்டு புத்தகம் சமப்படுத்தப்பட்டு வருடாந்த பொருள் மெய்மெய்யாய்வு சபைக்கு சமர்ப்பிக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பணிப்பாளர் நாயகம் (உள்ளக நிர்வாக பிரிவு) இனால் பொருட் பதிவேட்டு 66 பதிவேடு 2021 யூலை 09 ஆம் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வு சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பணிப்பாளர் நாயகம் (உள்ளக நிர்வாகம்) பிரிவின் காணப்படுகின்ற பொருட் பதிவேட்டு பொருட்கள் அந்த பிரிவின் பொருட் பதிவேட்டு புத்தகங்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தற்போது ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.<br><br>அதன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டிற்குரிய பொருட் மெய்மெய்யாய்வின் போது பணிப்பாளர் நாயகம் (உள்ளக நிர்வாகம்) பிரிவின் மெய்மெய்யாய்வு நடவடிக்கைகள் சரியான பிரகாரம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிப் பிரமானம் 755 | பொருட் பதிவேட்டு புத்தகத்தின் பிரகாரம் 113 பொருள் விடயங்களில் பற்றாக்குறை காணப்பட்டது. அந்த பொருட்கள் ஏனைய இடங்களுக்கு விநியோகிக்கப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்கு விநியோக கட்டளை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பொருட்கள்/ உபகரணங்கள் அலுவலக அலகிற்கு விநியோகிக்கப்பட்டிருந்தமையால் ‘‘பொது 141 விநியோகித்தல் கட்டளைகள்’’ சுற்றாடல் அலகிற்கு விநியோகிக்குமாறு உரிய பிரிவு / அலகுகளை தலைவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. உரிய பொருள்/ உபகரணங்கள் சுற்றாடல் அலகில் பொருட் பதிவேட்டு புத்தகத்தில் உள்ளடக்கி ‘‘பொது | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 219 பெறுவனவு கட்டளை உரிய பிரிவு. அலகிற்கு விநியோகிக்குமாறு உதவி பணிப்பாளர் சுற்றாடல் பிரிவிற்கு மேலதிக செயலாளர் (உள்ளக நிர்வாகம் மற்றும் செயற்பாடினால்) ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |
| (இ) | நிதிப் பிரமானம் 754 | சனாதிபதி செயலாளரின் அலுவலகத்தின் பொருட் பதிவேட்டு புத்தகம் சமப்படுத்தப்பட்டு 2021 யூலை 09 ஆம் திகதி வரையிலும் அதன் வருடாந்த பொருள் மெய்மெய்யாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சனாதிபதி செயலாளரின் அலுவலகத்தில் காணப்படுகின்ற பொருட் பதிவேட்டு பொருட்கள் அந்த பிரிவின் பொருட் பதிவேட்டு புத்தகங்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தற்போது மேலதிக செயலாளர் (உள்ளக நிர்வாகம் மற்றும் செயற்பாடுகளினால்) அந்த பிரிவிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ள துடன், அதன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மெய்யாய்வின் போது சனாதிபதி செயலகத்தின் மெய்மெய்யாய்வு நடவடிக்கைகள் சரியாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஈ) | நிதிப் பிரமாணம் 760 | i. | அநுராதபுர சனாதிபதி மாளிகையில் சில வருடங்கள் முழுவதும் மெய்மெய்யாய்வு சபையினால் பற்றாக்குறையாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள 40 அங்குள Sony LCD TV 02 தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முறையான ஆலோசனை வழங்கப்பட்டிருக்க வில்லை. | இந்த இரண்டு தொலைகாட்சி இயந்திரங்களையும் பழுது பார்ப்பதற்கான தகவல் தொழில் நுட்ப அலகிற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ள துடன், அந்த இரண்டு தொலைக்காட்சிகள் தொடர்பாக பரிந்துரை வழங்கமாறு பணிப்பாளர் (தகவல் மற்றும் தொலைத் தொடர்ப தொழில் நுட்பம்) இற்கு மேலதிக செயலாளர் (உள்ளக நிர்வாகம் மற்றும் செயற்பாடுகள்) இனால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | | ii. | கதிர்காமம் சனாதிபதி மாளிகையின் பௌதீக பரிசோதனையின் போது 12 விடயங்களில் பற்றாக்குறை காணப்பட்டது. அதில் 02 பொருட்கள் பழுது பார்ப்பதற்காக 2013 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது கையளிக்கப்படடிருந்த துடன், அந்த பொருட்கள் பழுது பார்த்தல் பூர்த்தி செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டு வரையிலும் மீள அலுவலகத்திற்கு பெறப்பட்டிருக்கவில்லை. | இந்த தொலைக்காட்சி இயந்திரங்கள் மற்றும் தொலை நகல் இயந்திரங்களை பழுதுபார்த்தலுக்காக தகவல் தொழில் நுட்ப அலகிற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதுடன், அந்த தொலைக்காட்சி இயந்திரங்கள் மற்றும் தொலை நகல் இயந்திரம் தொடர்பாக பரிந்துரையினை வழங்குமாறு பணிப்பாளர் (தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில் நுட்பம் இற்கு மேலதிக செயலாளர் (உள்ளக நிர்வாகம் மற்றும் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | செயற்பாடுகள்) இனால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |
| (உ) | நிதிப் பிரமாணம் 772 | அரசியல் அமைப்பு உறுப்புரை மற்றும் நியதிச் சட்ட பிரிவின் 2019 ஆம் ஆண்டின் போது விற்றுத் தீர்ப்பதற்கு கையளிக்கப்பட்ட கணனி UPS 02 இற்காக எந்தவொரு கட்டளையும் 2021 யூலை 01 ஆம் திகதியில் உள்ளவாரு விடய உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | அரசியல் அமைப்பு உறுப்புரை மற்றும் நியதிச் சட்ட நடவடிக்கைகள் பிரிவின் விற்றுத் தீர்ப்பதற்கு கையளிக்கப்பட் கணனி UPS 02 தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழில் நுட்ப பிரிவில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதுடன், அந்த துணைப் பாகங்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு திட்டமிடப்பட்டமையால், அந்த ஏல விற்பனையின் பின்னர் உரிய விடயங்களை பொருட் பதிவேட்டு புத்தகங்களில் இருந்து பதிவலிப்பதற்கு உரிய கட்டளை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.4 வங்கி கணக்கு செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 26 ஆம் திகதி முதல் 2021 யூலை 30 ஆம் திகதி வரையான காலத்தில் விநியோகிக்கப்பட்டிருந்த ரூபா 5,059,094 பெறுமதியான 122 காசோலைகள் 2021 செப்டம்பர் 30 ஆம் திகதி வரையிலும் வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதில் 06 மாதங்களை விஞ்சிய | 2021.08.31 ஆம் திகதியில் 06 மாதங்களை விஞ்சிய காசோலைகளுக்காக தற்போது நிதிப் பிரமானம் 369 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

ரூபா 453,736 கூட்டுப் பெறுமதியான 35 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமானம் 396 (ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.5 வைப்புக் கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 6000-000-00-0006-0077 ஆம் இலக்க வைப்புக் கணக்கின் கீழ் 2015 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 292,333,243 வைப்பு மீதி 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் செயற்பாடற்று காணப்பட்டது. 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற வைப்பு மீதி தொடர்பாக நிதிப் பிரமானம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 6000-000-00-0006-0077 ஆம் இலக்க இடர் உதவி நிதியத்தில் 2020 திசெம்பர் 31 இல காணப்பட்ட ரூபா 292,333,243 தொகையான மீதி 2021 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்தின் வருமாத்தில் செலவு வைக்கப்பட்டுள்ளது. | காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சனாதிபதி பதவி அணியினர் பிரதான பிரிவில் பொருட் பதிவேடுகளுக்கு கொண்டுவரப்பட்ட போதும் அந்த உத்தியோகத்தரினால் பயன்படுத்தப்படாத 01 கையடக்க தொலைபேசி பிரிவில் காணப்பட்டது. | சனாதிபதி பதவி அணியினர் பிரதான பிரிவின் பொருட் பதிவேடு புத்தகத்தில் உள்ள கையடக்கத் தொலைபேசி, முன்னாள் சனாதிபதி அலுவலகத்தின் தலைவரினால் பெறப்படிருந்த போதும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்தமையினால் தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழில் நுட்ப | பயன்படுத்தப்படாதுள்ள சொத்துக்களை ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அலகிற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், அதற்குரிய விநியோகித்தல் கட்டளை மற்றும் பெறுவனவு கட்டளை மற்றும் பெறுவனவு கட்டளையின் பிரகாரம் தற்போது பொருட் பதிவேட்டு புத்தகங்களை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

**4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட 09 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுதலின் செயல் முன்னேற்றம் சதவீதமாக காண்பிக்கப்பட்டமையால் அந்த செயற்பாடுகளை நிறைவேற்றுதலின் செயல் முன்னேற்றத்தை குறிப்பாக அளவீடு செய்யக் கூடிய நிலையில் காணப்படவில்லை. | 2020.08.28 ஆம் திகதிய அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2020 மற்றும் 02/2020 இற்குரிய அரச நிதி திணைக்களத்தின் இணைய தளத்தில் பிரசுரிக்கப்பட வேண்டிய மாதிரி படிவம் மற்றும் அதனுடன் சமர்ப்பிக்கப்பட்ட வழிகாட்டிக் கோவை இலக்கம் 12 இல் உள்ள ஆலோசனையின் பிரகாரம் உரிய படிவத்தில் செயல் முன்னேற்ற சதவீதம் அந்த முறையில் காண்பிக்கப்பட்டுள்ளது. | செயல் முன்னேற்றத்தை புள்ளி விபர ரீதியில் அளவிடக் கூடிய செயலாற்றல் குறிகாட்டிகள் உள்ளடக்கப்படல் வேண்டும். |
| (ஆ) சௌபாக்கியமுள்ள நோக்கு கொள்கையின் பிரகாரம் சகலருக்கும் குடிநீர் வழங்குதல் தொடர்பாக ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் அந்த செயற்திட்டங்களின் செயல் முன்னேற்றத்தை மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சு, இராஜாங்க அமைச்சு மற்றும் நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்காக உரிய தரப்பினர்களுக்கு இடையே சரியான தொடர்பினை பேணிச் செல்லல் மற்றும் தேவையான | நிலைபேரானா அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுதலின் செயல்முன்னேற்றம் எண்ணிக்கை புள்ளி விபரவியல் ரீதியில் அளவிடக்கூடிய செயலாற்றல் குறைகாட்டி, செயலாற்றல் செயல் முன்னேற்ற |

| | | | |
|---|---|---|---|
| | | கூட்டங்களை ஒழுங்கமைத்தல் சனாதிபதி அலுவலத்தில் உரிய ஒவ்வொரு பிரிவினாலும் மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறே அந்த சகல அபிவிருத்தி பணிகளுக்கும் உரிய செயல் முன்னேற்றம் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்தல் மற்றும் சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப அவற்றின் செயல் முன்னேற்றம் அதிமேதகு சனாதிபதிக்கு சமர்ப்பித்தலும் அநத பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் பிரகாரம் செயற்திட்ட எண்ணிக்கை அல்லது நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான தகவல்கள் உரிய அமைச்சு அல்லது நிறுவனத்தின் மூலம் செயலாற்றல் முன்னேற்றத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. | அறிக்கையில் உள்ளடக்கப்படல் வேண்டும். |
| (இ) | தெயட்ட எலிய செயற்திட்டத்தின் கீழ் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட மிகவும் வறுமையில் வாடும் குடும்பங்களுக்காக எந்தவொரு அறவிடலும் இன்றி மின்சாரத்தை வழங்கும் நோக்கத்துக்காக வெற்றி பெற்ற குறிகாட்டியாக பேணிச் செல்லப்படுகின்ற கூட்டங்கள் /கலந்துரையாடல் எண்ணிக்கையாக குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்காக எடுக்கப்பட்ட வழிகள் அல்லது நிறைவேற்றப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பான எண்ணிக்கைகளை அளவிடக் கூடிய குறிகாட்டி செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | நிலைபேறானா அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றும் செயல்முன்னேற்றத்தை எண்ணிக்கை ரீதியில் அளவிடக்கூடிய செயலாற்றல் குறிகாட்டி செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | முழுமையான மற்றும் நியாயமான கல்வி ஒன்றை பாதுகாத்தல் மற்றும் சகலருக்கும் ஆயுட் காலம் முழுவதும் கல்விக்கான சந்தர்ப்பங்களை மேம்படுத்துதல் என்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக மீளாய்வாண்டில் 0ஒக்ஸ்டிப் தெரில்நுட்ப தொடர்பு இணைப்பு வழங்கப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | நிலைபேறானா அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றும் செயல்முன்னேற்றத்தை எண்ணிக்கை ரீதியில் அளவிடக்கூடிய செயலாற்றல் குறிகாட்டி செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்படல் வேண்டும். |